ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2308/17 - 2022 නොවැම්බර් මස 30 වැනි බදාදා - 2022.11.30

*2308/17 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்டங்கள் தொடர்பில், அந்த அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் பீடங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் ஒரு வருட காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாக இருத்தல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விதிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 2298/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் பெரிய வெங்காயத்திற்காக (சுங்கக் குறியீட்டு இலக்கம் 0730.10.20) வெளியிடப்பட்டதும் மற்றும் 2007 ஆம் ஆண்டில் 48 ஆம் இலக்க விசேட வர்த்தகப் பண்ட அறவீட்டு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதிய

1A — PG 6075 - 481 (2022/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2280/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் ரின் மீனுக்காக (சுங்கக் குறியீட்டு இலக்கம் 16.04) வெளியிடப்பட்டதுமான கட்டளைகளை 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும் விதமாக இரத்துச் செய்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, நவெம்பர் 29.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | |
| 1 | 04.03 | 0403.10 | யோகட் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 2,000 |
| | | 0403.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 2,000 |
| 2 | 04.05 | 0405.10 | வெண்ணெய் கட்டி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 1,500 |
| | | 0405.20 | பால் பரவற் பொருட்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 2,000 |
| | | 0405.90 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 2,000 |
| 3 | 04.06 | 0406.20 | எல்லாவகையான அரைக்கப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட பாலாடைக் கட்டிகள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 600 |
| 4 | 07.03 | 0703.10.20 | பெரிய வெங்காயம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 10 |
| 5 | 08.04 | 0804.10.10 | பேரீச்சம் பழங்கள் - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| | | 0804.10.20 | பேரீச்சம் பழங்கள் - காய்ந்த | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| 6 | 08.05 | 0805.10.10 | தோடம்பழங்கள் - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 600 |
| 7 | 08.06 | 0806.10 | திராட்சைப் பழங்கள் - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 600 |
| 8 | | 0606.20 | திராட்சைப் பழங்கள் - காய்ந்த | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 600 |
| 9 | 08.08 | 0808.10 | அப்பிள்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 600 |
| 10 | 08.10 | 0810.90.90 | பிற (பழங்கள்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 600 |
| 11 | 19.04 | 1604.11 | செமன் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| | | 1604.12 | ஹெரிங்ஸ் (ஒரு வகை சிறிய கடல் மீன்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| | | 1604.13 | சாடின், சாடினெல்லா மற்றும் பிரிஸ்லின் அல்லது நெத்தலி | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| | | 1604.14 | ரியுனாங்கள், ஸ்கிப்ஜெக் மற்றும் ஜொனிட்டோ (சர்டா இனம்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| | | 1604.15 | மெக்கரல் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| | | 1604.16 | என்சோவிஸ் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| | | 1604.17 | விலாங்கு மீன் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| | | 1604.19 | பிற | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |
| | | 1604.20 | பிற தயாரிக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்பட்ட மீன்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 200 |

EOG 12-0055

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.